08.02.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. (ஒ.எஸ்.எண்.68/2022) திரு.ராஜா.

1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –

எனது அம்மாவான 1ம்வாதிக்கு சொந்த ஊர் எது என்றால் குறிஞ்சாங்குளம் கிராமம். தற்போது எனது அம்மா எங்கு உள்ளார் என்றால் நான் வேலை செய்து வரும் சிவகாசியில் என்னுடன் வசித்து வருகிறார். நல்ல ஆரோக்கியத்துடன் தான் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். குறிஞ்சாங்குளம் கிராமத்தில் எனது அம்மாவின் தகப்பனார் பெயர் என்ன என்றால் சங்கரப்ப நாயக்கர். எனது அம்மாவுடன் மொத்தம் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் 6 பேர்கள். அதில் 4 பெண்கள், 2 ஆண்கள்.அவர்கள் எல்லாம் தற்போது எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் சிவகாசி அருகில் உள்ள சித்துராஜபுரத்தில் வசித்து வருகிறார்கள். 1ம்பிரதிவாதி ரத்தித்தினம் கணவருக்கு எந்த ஊர் என்றால் சங்கரன்கோவில் அருகில் உள்ள இருமன்குளம். அவரின் தகப்பனார் பெயர் என்னவென்றால் சொக்கையாத்தேவர். ரத்தினத்தின் உடன்பிறந்தவர்கள் எத்தனைபேர்கள் என்றால் மேற்படி சொக்கையாத்தேவர் 2 மனைவிகள். 2வது மனைவிக்கு பிறந்தவர்கள் தான் ரத்தினம், அவரது தம்பியான அருணாசலப்பாண்டி ஆகியோர்கள். ரத்தினத்திற்கு பூர்வீகச்சொத்துக்கள் இருக்கிறது என்றால் எனது அப்பா இருப்பதாக சொல்லியிருக்கிறார். ரத்தினம் என்பவருக்கும் எனது தாயாரான 1ம்வாதிக்கும் 20.11.1987ல் திருமணம் நடைபெற்றதாக எனது நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளோன் எங்கு வைத்துதிருமணம் நடைபெற்றதாக பிராதில்சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி திருமணம் என்ன முறைப்படி நடைபெற்றது என்று எனக்குத்தெரியாது என்றால் சரிதான், திருமணம் நடைபெற்றதாக மட்டும்சொன்னார்கள். அந்த திருமணம் எப்படி நடைபெற்றது என்னமுறைப்படி நடைபெற்றது எங்கு வைத்து நடைபெற்றது என்ற விவரம் எனது அம்மாவுக்குத்தான் தெரியும் என்றால் சரிதான். எனதுஅம்மாவுக்கும், ரத்தினத்திற்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை நிரூபிக்கும்பொருட்டு எழுத்துப்பூர்வமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிராதில் நாங்கள் ஒரே வீட்டில் குடியிருந்தாக சொல்லியுள்ளேன் அது எந்த ஊரில் குடியிருந்து வந்தோம் என்ற விலாசத்தினை எனது நிருபண வாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கால்நடை மருத்துவம் படித்தவர்

என்றால் சரிதான். பொதுவாக ஒரு குழந்தை கருவுற்றதிலிருந்து எத்தனை நாட்களுக்குள் பிறக்கும் என்றால் சுமாராக 270 நாட்கள் அல்லது 280 நாட்கள் என்றால் சரிதான். 215 நாட்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால் அது முழுமையான குழந்தையாக இருக்க வாய்பில்லை என்றும் அது இறந்து போய்விடும் என்று சொன்னால் சரிதான். ரத்தினத்திற்கும், எனது அம்மாவுக்கும் திருமணம் நடைபெற்றது 20.11.1987 ல் நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்றும் எனது சகோதரி பிறந்த தேதி 23.06.1988 என்று எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த மேற்படி இரண்டு தேதிக்கும் இடைப்பட்ட காலம் 215 நாட்கள் தான் என்றால் சரிதான். 2ம்வாதிக்கு ஏற்பட்ட பிறப்பு சான்றோ, சாதி சான்றிதழோ எங்கள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி கோவில்பட்டி வட்டம்,பாண்டவர்மங்களம், ராஜீவ் நகர், 6வது தெரு கதவு எண்.1238 சி/6 என்ற வீடு 1ம்பிரதிவாதியின் பெயரில் இருந்து வருகிறது என்றால் சரிதான். ரத்தினம் எப்போது ஓய்வு பெற்றார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரத்தினம் என்பவர் ஓய்வு பெறும் காலத்தில் பணியில் இருந்தாரா அல்லது பணி இடை நீக்கம் செய்யப்பட்டு இருந்தாரா என்றுசொன்னால் பணியில் தான் இருந்தார்.ஓய்வு பெறும் நேரத்தில் எங்கு பணியில் இருந்தார் என்றால் ஞாபகமில்லை. எனக்கு ரத்தினம் எப்போது ஓய்வு பெற்றார் என்ற விவரம் தெரியாததால் தான் பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக ஞாபகமில்லை சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ரத்தினம் இறப்பு தேதி 01.09.2021 என்றால் சரிதான். தாவா வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது 21.03.2022 என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் அவரின் வயதை கணக்கிட்டால் அவருக்கு சுமாராக 69வயது என்றால் சரிதான். ஓய்வு பெறும் காலத்திலோ அதற்கு முன்பாகவோ ரத்தினத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களில் பாகம் கேட்டோமா அல்லது வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. ரத்தினம் என்பவருக்குப் பாத்தியப்பட்ட சொத்தின் விவரம் எனது பிராதில் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி, ரத்தினம் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட திருமணம் ஊர்ஜிதத்தில் இருக்கும் போது தான் எனது தாயாருக்கும், ரத்தினத்திற்கும் திருமணம் நடைபெற்றதாக சொல்லுகிறேன் என்றால் சரிதான். எனவே அந்த திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு

திருமணம் நடைபெற்றுவிட்டதா என்றால் ஆமாம். வழக்கமாக ஒரு ஆணோ, பெண்ணோ ஆரம்ப பள்ளியில் சேர்க்கும் போது அதன் பிறப்பு சான்றும்,ஜாதி சான்றும் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். எனது சகோதரிக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. 3ம்பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரி எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான. பிராதில் சொல்லாத ஒரு விவரத்தை எனது சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சாட்சியத்தின் ஒருபகுதியாக வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட 1முதல் 10 ஆவணங்களை அசல் ஆவணங்களை காண்பித்து அதற்குரிய நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசலை குறியீடு செய்யாமல் அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்து விட்டு அசலை பெற்றுச்சென்றதற்கான காரணம் என்னவென்றால் தெரியவில்லை. குறிஞ்சாங்குளம் கிராமம் பக்கத்தில் வெள்ளாக்குளம் கிராமம் உள்ளது அந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 23.02.2024. தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
08.02.2024.